வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்- மலர்விழி

தேதி 10.5.2024 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

மத ரீதியிலான இடஒதுக்கீட்டை கொண்டு வருவதன் மூலம் அரசியல் சாசனத்தை மாற்ற, காங்கிரஸ் விரும்புவதாக, பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி குற்றம் சாட்டி உள்ளார்.

டெல்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜரிவாலுக்கு, உச்சநீதிமன்றம், 21 நாள் இடைக்கால ஜாமீன் வழங்கி உள்ளது.

புதுச்சேரியில் கம்பன் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 57-ஆம் ஆண்டு கம்பன் விழாவை, துணை நிலை ஆளுநர் திரு சி பி ராதா கிருஷ்ணன் இன்று தொடக்கி வைத்தார்.

புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் இவ்வாண்டு 10-ஆம் வகுப்பு பொது தேர்வில், தேர்ச்சி விகிதம், 89.14 சதவிகிதமாக உள்ளது.

மோடி-பேட்டி

மதரீதியிலான இடஒதுக்கீட்டை கொண்டு வருவதன் மூலம் அரசியல் சாசனத்தை மாற்ற காங்கிரஸ் விரும்புவதாக, பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி குற்றம் சாட்டி உள்ளார். தமது அரசு

அரசியல் சாசனத்தை மாற்றும் என தாம் ஒருபோதும் சொல்லவில்லை என்று, புதுடெல்லியில், தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் அவர் கூறினார். பேச்சு சுதந்திரத்தில் திருத்தம் கொண்டு வந்ததன் மூலம், காங்கிரஸ் ஏற்கனவே, அரசியல் சாசனத்தின் அடிப்படை உணர்வைத் தாக்கி இருப்பதாக, அவர் தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு சாம் பிட்ரோடா இந்தியர்கள் குறித்து அண்மையில் வெளியிட்ட கருத்துக்களை வைத்துப் பார்த்தாலே, காங்கிரஸ் கட்சியின் மனப்போக்கு புரிந்து விடும் என்று திரு நரேந்திர மோடி கூறினார். கிருஷ்ணரை வழிபடும் நாடான இந்தியாவில் கருப்பு-வெளுப்பு என்ற பேச்சிற்கே இடமில்லை என்றும், ஜாதி, இனம், மொழி அடிப்படையில் பாகுபாடு கூடாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

*மோடி- (16)*

நாட்டின் பழங்குடிப் பகுதிகளில், பக்கா வீடுகள், மின் இணைப்பு, குடிநீர் குழாய் இணைப்பு, கேஸ் இணைப்பு மற்றும் இதர வசதிகளை, தேசிய ஜனநாயக கூட்டணி அரசு மக்களுக்கு வழங்கி இருப்பதாக, மூத்த பிஜேபி தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். இன்று மகாராஷ்டிர மாநிலம் நந்தூர்பார் பகுதியில், தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர் இப்பகுதியில் மட்டும் பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ், 1 லட்சத்து 25 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டுள்ளதாக தெரிவித்தார். கரடுமுரடான நந்தூர்பார் பகுதியின் தொலைதூர கிராமங்கள் உட்பட மகாராஷ்டிர மாநிலம் முழுவதிலும் சுமார் 30 ஆயிரம் கிராமங்களுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப் பட்டுள்ளதாகவும், அவர் கூறினார். நாட்டின் வரலாற்றிலேயே முதல் முறையாக, பழங்குடி இனத்தைச் சேர்ந்த திருமதி திரவுபதி முர்முவை,

குடியரசுத் தலைவராக்கியது, தேசிய ஜனநாயக கூட்டணி தான் என்று, திரு நரேந்திர மோடி கூறினார். காங்கிரஸ், பழங்குடிப் பகுதிகளை புறக்கணிப்பதாக அவர் மேலும் குற்றம் சாட்டினார்.

மோடி-தெலங்கானா-ஒடிசா

பிரதமரும், பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி, இன்று தெலங்கானா மாநிலம் நாராயண்பேட் மற்றும், ஐதராபாத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட பின்னர் ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் சாலை பவனி நடத்துகிறார். இன்று இரவு புவனேஸ்வரில் தங்கிய பின்னர் நாளை, கந்தேமால், பலாங்கீர் உள்ளிட்ட இடங்களில் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டங்களில் அவர் உரையாற்ற இருக்கிறார்.

மோடி-வாழ்த்து

இன்று அட்சய திரிதியை திருநாளை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். மக்கள் தர்ம காரியங்களில் ஈடுபடுவதை ஊக்குவிப்பதாக, மங்களரமான இந்நாள் அமையட்டும் என்றும், ஒவ்வொருவர் வாழ்விலும் புதிய ஆற்றல் மற்றும் உற்சாகம் சேரட்டும் என்றும், சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், பிரதமர் கூறி உள்ளார்.

இதற்கிடையே அட்சய திரிதியை நாளான இன்று உத்தராகண்ட் மாநிலத்தில், புகழ்பெற்ற சார் **தாம் யாத்திரை** தொடங்கி உள்ளது. யாத்திரை தொடங்குவதை குறிக்கும் வகையில் இன்று காலை வேதமந்திர கோஷங்களுக்கு இடையில், கேதார்நாத் கோவில் நடை திறக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து யமுனோத்ரி கோவில், மற்றும், கங்கோத்ரி கோவிலிலும் நடை திறக்கப்பட்டது.

நட்டா

பிஜேபி தேசிய தலைவர் திரு ஜேபி நட்டா இன்று அரியானா மாநிலம் பஞ்ச்குலாவில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். நடப்பு தேர்தல், பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையில், முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்துவதற்கான தேர்தல் என்று அவர் கூறினார். ஊழலை பெருக்கும் கட்சி காங்கிரஸ் என்றும், திருமதி சோனியாகாந்தி, திரு ராகுல்காந்தி போன்ற காங்கிரஸ் தலைவர்கள், தற்போது ஜாமீனில் தான் வெளியே இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அமித் ஷா

மூத்த பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு அமித் ஷா, தேர்தல் பிரச்சாரத்தின் ஒருபகுதியாக, இன்று மாலை மேற்கு வங்க மாநிலம் ராணிகஞ்ச் பகுதியில், சாலை பவனி நடத்துகிறார். முன்னதாக இன்று பிற்பகல் பிர்பூம் மாவட்டத்திலும், நதியா மாவட்டத்திலும், தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டங்களில் அவர் உரையாற்றினார்.

உத்தரபிரதேஷ்

மூத்த காங்கிரஸ் தலைவர் திரு ராகுல் காந்தி, சமாஜ்வாதிக் கட்சியின் தலைவர் திரு அகிலேஷ் யாதவ் ஆகியோர் இன்று உத்தரபிரதேச மாநிலம் கன்னாஜ் பகுதியில் கூட்டாக தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டனர். மத்தியில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால், விவசாயிகள் வறுமைக் கோட்டில் இருந்து விடுபடும் வரை, அவர்களுக்கு நிதி உதவி வழங்கப்படும் என்று திரு ராகுல்காந்தி கூறினார். அரசியல் சாசனத்தை மாற்ற பிஜேபி முயலுவதாக திரு அகிலேஷ் யாதவ் குற்றம் சாட்டினார். இருதலைவர்களும் இன்று கான்பூர் மாவட்டத்திலும், கூட்டாக தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

*கெஜ்ரிவால்*

டெல்லி அரசின் மதுபானக் கொள்கை தொடர்பாக பணச் சலவை வழக்கில், உச்சநீதிமன்றம், டெல்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜரிவாலுக்கு, 21 நாள் இடைக்கால ஜாமீன் வழங்கி உள்ளது. ஏழு கட்ட மக்களவைத் தேர்தல், ஜுன் 1-ஆம் தேதி முடிந்த பின்னர் மறுநாள் 2-ஆம் தேதி அவர் சரணடைய வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மக்களவை தேர்தல் பிரச்சாரத்திற்காக, சிறையில் இருந்து தம்மை விடுவிக்க வேண்டுமென திரு அரவிந்த் கேஜரிவால் கோரி இருந்தார். அமலாக்கப் பிரிவினர் இந்த வழக்கில் கால தாமதமாகவே திரு கேஜரிவாலை கைது செய்திருப்பதாக, நீதிபதிகள் திரு சஞ்சீவ் கன்னா, திரு தீபாங்கர் தத்தா ஆகியோர், தங்களின் தீர்ப்பில் கூறினர். கடந்த 2022-ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் பதிவு செய்யப்பட்ட வழக்கில் கைது நடவடிக்கை இவ்வாண்டு மார்ச் மாதம் தான் மேற்கொள்ளப்பட்டதாக நீதிபதிகள் சுட்டிக் காட்டினர்.

*கம்பன் விழா*

புதுச்சேரியில் கம்பன் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 57-ஆம் ஆண்டு கம்பன் விழாவை, துணை நிலை ஆளுநர் திரு சி பி ராதா கிருஷ்ணன் இன்று தொடக்கி வைத்தார். கம்பன் கலையரங்கில், முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி திரு ராமசுப்பிரமணயின் தலைமையில் நடைபெற்ற துவக்க விழாவில், புதுச்சேரி முதலமைச்சரும், கம்பன் கழகப் புரவலருமான திரு ரங்கசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். புதுச்சேரி கம்பன் கழகத்தால் பதிப்பிக்கப் பெற்றுள்ள கம்ப ராமாயண நூலை, விழாவின் போது துணை நிலை ஆளுநர் வெளியிட, முதல் பிரதியை, முதலமைச்சர் பெற்றுக் கொண்டார். கம்ப ராமாயணத்தை பறை சாற்றும் வகையிலான

விவாத மேடை, கவியரங்கம், உரையரங்கம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள், இந்த 3 நாள் விழாவில் இடம் பெறுகின்றன.

10-ஆம் வகுப்பு

10-ஆம் வகுப்பு பொது தேர்வு முடிவுகள் இன்று வெளியாகி உள்ளன. புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் உள்ள, 289 அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் இருந்து, இவ்வாண்டு மொத்தம் 14 ஆயிரத்து 952 மாணவ-மாணவியர் 10-ஆம் வகுப்பு பொது தேர்வு எழுதியதில், 6 ஆயிரத்து 527 மாணவர்கள், 6 ஆயிரத்து 801 மாணவிகள் என, மொத்தம் 13 ஆயிரத்து 328 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். ஒட்டு மொத்த தேர்ச்சி விகிதம், 89.14 சதவிகிதமாகவும், அனைத்து அரசுப் பள்ளிகளின் தேர்ச்சி விகிதம், 78.08 சதவிகிதமாகவும் உள்ளது. புதுச்சேரி பகுதியில் 90 பள்ளிகளும், காரைக்காகால் பகுதியில் 17 பள்ளிகளும், 100 சதவிகித தேர்ச்சி விகிதம் காட்டி உள்ளன. புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் மொத்தம் உள்ள 108 அரசுப் பள்ளிகளில், 8 அரசுப் பள்ளிகளில், 100 சதவிகித தேர்ச்சி விகிதம் எட்டப்பட்டுள்ளது. கணிதம், அறிவியல், சமூகவியல், ஆங்கிலம் ஆகிய 4 பாடங்களில், மொத்தம் 553 மாணவ-மாணவியர் 100-க்கு 100 மதிப்பெண் பெற்றுள்ளனர். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் ஒட்டு மொத்த தேர்ச்சி விகிதம் அதிகரித்து இருப்பதாகவும் பள்ளிக் கல்வி இயக்ககம் தெரிவித்துள்ளது.

தடை

நாடு முழுவதும் சைபர் குற்றங்களுக்கு பயன்படுத்தப்பட்ட சுமார் 28 ஆயிரம் மொபைல் தொலை பேசிகளை தடை செய்யுமாறு மத்திய அரசின் தொலை தொடர்புத் துறை தொலை தொடர்பு சேவை நிறுவனங்களுக்கு அறிவுறுத்தி உள்ளது. இதே 28 ஆயிரம் மொபைல் தொலைபேசிகள், சுமார் 20 லட்சம் தொலைதொடர்பு இணைப்புகளுடன் பயன்படுத்தப்

பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சகம் மற்றும் மாநில காவல் துறைகளின் பகுப்பாய்வில் தெரிய வந்திருப்பதால், இந்த எல்லா இணைப்புகளையும் உடனடியாக மீண்டும் சரிபார்க்கவும், சரிபார்ப்பில் தவறும் இணைப்புகளை துண்டிக்கவும் அறிவுறுத்தப் பட்டுள்ளது. இத்தகைய ஒருங்கிணைந்த முயற்சிகள் மூலமாகவே, மோசடி நபர்களுக்கு இடையிலான தொலை தொடர்பு கட்டமைப்பை குலைத்து, டிஜிட்டல் அச்சுறுத்தல்களில் இருந்து மக்களை பாதுகாக்க முடியும் என்றும், தொலை தொடர்புத் துறை தெரிவித்துள்ளது.

*கப்பல்*

கப்பல் கட்டுமானத்திற்கு ஏற்ற அலுமினிய தகடுகளை தயாரித்து வழங்க, ஹிண்டால்கோ நிறுவனத்துடன், இந்திய கடலோரக் காவல் படை, புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. தற்போது குறைந்த ஆழத்திலும் இயக்கத் தகுந்த, 67 அலுமினியக் கலங்கள், கடலோரக் காவல்துறையின் பயன்பாட்டில் உள்ளன. நாட்டின் கடலோரப் பாதுகாப்பை வலுப்படுத்தும் வகையில், மேற்கொண்டு இதேபோன்ற கப்பல்களை சேர்த்துக் கொள்ள, கடலோரக் காவல் படை திட்டமிட்டுள்ளது.

*வானிலை*

கிழக்கு மற்றும் தென்கிழக்கு தீபகற்ப இந்தியாவில் நிலவிய வெப்ப அலை, தணிந்து விட்டதாகவும், தற்போது மேற்கு ராஜஸ்தான் தவிர வேறு எங்கும் வெப்ப அலை இல்லை என்றும், இந்திய வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது. மேற்கு ராஜஸ்தானிலும் நாளை முதல் வெப்பம் குறையத் தொடங்கும் என்றும் வரும் 13-ஆம் தேதி 4-ஆம் கட்ட மக்களவைத் தேர்தல் நடைபெற உள்ள எந்த பகுதியிலும் வெப்ப அலை இராது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழக உள்மாவட்டங்களின் அநேக இடங்களில்

அடுத்த 5 நாட்களுக்கு, வெப்பநிலை இயல்பை ஒட்டியே இருக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் 33 முதல் 37 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை பதிவாகலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக கோவை, நீலகிரி, தேனி, திண்டுக்கல், நெல்லை, குமரி உள்ளிட்ட மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் தமிழகத்தில் அதிகபட்சமாக கரூர் பரமத்தியில் 45.5 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையும், தேனி மாவட்டம் சோத்துப்பாறையில், 13 சென்டிமீட்டர் மழையும் பதிவாகி உள்ளது.

*ஐபிஎல்*

ஐபிஎல் கிரிக்கெட்டில் இன்று இரவு 7.30 மணிக்கு அகமதாபாத்தில் நடைபெற உள்ள போட்டியில் சென்னை-குஜராத் அணிகள் மோத உள்ளன. 10 ஐபிஎல் அணிகளுக்கான புள்ளி பட்டியலில் தற்போது சென்னை அணி 4-ஆவது இடத்திலும், குஜராத் அணி கடைசி இடத்திலும் உள்ளன.

*திரைப்பட விழா*

பிரான்சில், வரும் 14-ஆம் தேதி முதல் 25-ஆம் தேதி வரை நடைபெற உள்ள, **கேன்ஸ் திரைப்பட விழாவில்**, இந்தியா பங்கேற்க உள்ளது. இவ்விழாவிற்கான **கார்ப்பரேட் இந்தியக்** குழுவில், மத்திய அரசு, மாநில அரசுகள் மற்றும் தொழில் துறைப் பிரதிநிதிகள் கலந்து கொண்டு, உலகின் முன்னணி திரைப்பட சந்தையில், **படைப்புத் திறன் சார்ந்த இந்திய பொருளாதாரத்தின்** சிறப்புகளை எடுத்துக் கூற உள்ளனர். கேன்ஸ் திரைப்பட விழாவில் இவ்வாண்டு முதன் முறையாக, **பாரத் பர்வ** விழாவை,

இந்தியா நடத்தும் என்று, மத்திய- தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. கேன்ஸ் திரைப்படவிழாவில் அமைய உள்ள இந்திய அரங்கு, இந்திய திரைப்பட சமூகத்தினர், பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபடுவதற்கான மேடையாக திகழும் என்றும், திரைப்படத் தயாரிப்பு, மற்றும் விநியோகத்தில் சர்வதேச நிறுவனங்களுடன் ஒத்துழைப்பை மேம்படுத்த இதனால் ஏதுவாகும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. கோவாவில் நடைபெற உள்ள 55-ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழாவிற்கான அறிமுக போஸ்டர் மற்றும் முன்னோட்டக் காணொளியும், கேன்ஸ் திரைப்பட விழாவின் பாரத் பர்வ நிகழ்வுகளில் வெளியிடப்படும்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

மதரீதியிலான இடஒதுக்கீட்டை கொண்டு வருவதன் மூலம் அரசியல் சாசனத்தை மாற்ற, காங்கிரஸ் விரும்புவதாக, பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி குற்றம் சாட்டி உள்ளார்.

டெல்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜரிவாலுக்கு, உச்சநீதிமன்றம், 21 நாள் இடைக்கால ஜாமீன் வழங்கி உள்ளது.

புதுச்சேரியில் கம்பன் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 57-ஆம் ஆண்டு கம்பன் விழாவை, துணை நிலை ஆளுநர் திரு சி பி ராதா கிருஷ்ணன் இன்று தொடக்கி வைத்தார்.

புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் இவ்வாண்டு 10-ஆம் வகுப்பு பொது தேர்வில், தேர்ச்சி விகிதம், 89.14 சதவிகிதமாக உள்ளது.